**கவனிக்க.**– *2014.09.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1883 - 2014 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2014.10.03

*1883 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 924 |
| விலைக் கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 927 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**கவனிக்க.**– *சந்திரகுமார் சமூக மேம்பாட்டு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II க்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச்சட்டம்

*(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டபிள்யூ. டீ. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, செத்தெம்பர் 10.

### ஒழுங்குவிதிகள்

1. அம்பலாந்தோட்டை, கிரிஹண்டு ரஜமஹா விகாரையின் துருது மஹா பெரஹரா ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ் ஒழுங்குவிதிகள் -

''முகாம் பிரதேசம்'' என்பது இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடப்பரப்பு எனப் பொருள்படும்.

''மாவட்டச் செயலாளர்'' என்பது அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் ''மாவட்டச் செயலாளர்'' எனப் பொருள்படுவதுடன் 4 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் அவரால் அதிகாரம் வழங்கப்பட்டவரான எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

''மருத்துவ அலுவலர்'' என்பது முகாம் பிரதேசத்திற்குப் பொறுப்பாக உள்ள சுகாதார மருத்துவ அலுவலர் என்று பொருள்படும்.

''யாத்திரிகர்'' என்பது முகாம் பிரதேசத்திற்குச் செல்லும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

''பொலிஸ் அலுவலர்'' என்பது, முகாம் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் கிராம அலுவலரையும் உள்ளடக்கும். அத்துடன் ''பொதுச் சுகாதார பரிசோதகர்'' என்பது வாடிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் எனப் பொருள்படும்.

3. அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை, கிரிஹண்டு ரஜமஹா விகாரையின் துருது மஹா பெரஹரா விடயமாக.

4. மாவட்டச் செயலாளர் இவ் ஒழுங்குவிதியின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கும் தம் மீது உரிய முறையில் சுமத்தப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதற்கும் அரசாங்க உத்தியோகத்தர் எவருக்கும் அதிகாரம் வழங்குவதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

5. (1) முகாம் பிரதேசத்திற்குள் அல்லது முகாம் பிரதேசத்திற்கு வெளியே அல்லது முகாம் பிரதேசத்திற்குள்ளே வாகனப் போக்கு வரத்து அல்லது நடைகாரர் போக்குவரத்தையும் ஒழுங்குபடுத்த மாவட்ட செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்கு விதியின் 1 ஆவது பந்தியின் கீழ் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலின் போது, மாவட்டச் செயலாளரினால் எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு விடுக்கப்பட்டுள்ள எந்த அறிவுறுத்தல்களையும் அனுசரிக்கும் முகமாக அத்தகைய அலுவலரினால் விடுவிக்கப்பட்ட சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறி நடத்தல் ஆகாது.

6. மாவட்டச் செயலாளரின் எழுத்திலான அனுமதியுடனின்றி ஆள் எவரும் கால்நடையையோ வேறேதும் மிருகத்தையோ வாடிப் பிரதேசத்திற்குள் கொண்டு செல்லலாகாது. எவ்வாறாயினும் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்து வதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வண்டிகளையும் மாடுகளையும் செலுத்திச் செல்வது தொடர்பாக, இவ் ஒழுங்கு விதி ஏற்புடையதாகாது.

7. (1) முகாம் பிரதேசத்தினுள் பின்வரும் இடங்களை ஒதுக்குவதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும் :-

(அ) பஸ்களையும் பிற மோட்டார் வாகனங்களையும் நிறுத்து வதற்கான இடங்கள் ;

(ஆ) வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்தி வைப்பதற்கான இடங்கள் ;

(இ) ஒவ்வொரு யாத்திரிகர் தொகுதிக்கும் இருப்பாட்சி செய் வதற்கான தனித்தனி இடங்கள் ;

(ஈ) சுகவீனமுறும் யாத்திரிகள் தங்குவதற்கான இடங்கள் ;

(உ) பிச்சை மற்றும் தானம் கேட்பவருக்கான இடங்கள் ;

(ஊ) விற்பனைக்காக குறிப்பிட்டவொரு பொருளை காட்சிக்கு வைப்பதற்கான இடங்கள் ;

(எ) பல்வேறுபட்ட காரியங்களுக்காக சாவடிகளை அமைப்பதற் கான இடங்கள் ;

(ஏ) கழுவுதல் நிமித்தம் யாத்திரிகள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஐ) நீராடும் நிமித்தம் யாத்திரிகள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள்;

(ஒ) நீர் அருந்துதல் நிமித்தம் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஓ) மாவட்டச் செயலாளர் அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான ஏனைய நோக்கங்களுக்கான இடங்கள்.

(2) மாவட்டச் செயலாளர் அது அவசியமானதெனக் கருதும் பட்சத்தில் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஓர் நோக்கத்திற்காக ஏதேனும் ஓர் இடத்தை அறிவிப்பு அல்லது பெயர் பலகை அல்லது காட்சிப்படுத்துவதன் மூலம் ஒதுக்கி வைக்கலாம்.

(3) பந்தி (1) இன் கீழ் ஏதேனும் நோக்கத்திற்காக மாவட்ட செயலாளரினால் ஒதுக்கப்படுமிடத்து அல்லது வழங்கப்படுமிடத்து அவ்விடத்தினை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஆள் எவரும் முகாம் பிரதேசத்திற்குள் அமைந்த வேறு ஏதேனும் இடத்தை அத்தகைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாகாது.

8. நோய்கள் பரவாமற் தடுக்கும் பொருட்டு முகாம் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் குளம், கிணறு, நீர்ச்சுனை அல்லது நீர்த்தேக்கம் என்பவற்றில் குளோரின் இடுவதற்கு அல்லது ஏதாவதொரு குளத்தினை, கிணற்றை, நீர் நிலையை மூடிவிடுவதற்கு அவசியமென மாவட்டச் செயலாளர் அல்லது வைத்திய அதிகாரி கருதும் பட்சத்தில் அவ்வாறு செய்வதற்கு தத்துவமுடையவராதல் வேண்டும்.

9. (1) 7 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட இடமொன்றில் மாவட்டச் செயலாளரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்துடன் அன்றியும் அத்தகைய அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு அன்றியும் ஆள் எவரும் வழங்கப்பட்டுள்ள முகாம் பிரதேசத்துக்குள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஏதேனும் ஒரு சாவடியை அல்லது தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடத்தை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டடமொன்றுக்கு அல்லது வேறு அமைவிடத்திற்கு புதிதாக பகுதியொன்றினை இணைத்தல் ஆகாது.

(2) ஒழுங்கு விதியின் 1 ஆவது பந்திக்கு முரணான வகையில் இத்தகைய சாவடியொன்றினை அல்லது தற்காலிக அல்லது நிரந்தர கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடமொன்றினை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டிடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக ஒரு பகுதியை சேர்த்தால் அந் நபருக்கு எழுத்து மூல அறிவித்தல் ஒன்றினை வழங்கிய பின் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் படி குறிப்பிட்ட காலப்பகுதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அத்தகைய சாவடியை அல்லது கட்டடத்தினை தற்போதுள்ள கட்டடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியை அப்புறப்படுத்துமாறு அல்லது அழிக்குமாறு மாவட்ட செயலாளரினால் அந் நபருக்கு உத்தரவிடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இவ் ஒழுங்கு விதியின் 2 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்றினைப் பெற்றுக் கொண்ட நபர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அவ்வறிவித்தலில் உள்ள உத்தரவுகளுக்கமைய இணங்கியொழுகத் தவறும்பட்சத்தில் அல்லது அதுபற்றிய சந்தேகம் எழும் பட்சத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அத்தகைய சாவடியினை அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியினை அப்புறப்படுத்துதல் அழித்தல் மாவட்ட செயலாளரினால் சட்டமுறையாதல் வேண்டும் என்பதுடன் அதனை அப்புறப்படுத்தல் அல்லது உடைத்தல் என்பவற்றிற்கு தேவையான கூலியாட்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சகிதம் குறிப்பிட்ட இடத்திற்கு அல்லது நிலத்திற்கு மாவட்ட செயலாளர் உட் செல்லுதல், அப்புறப்படுத்தல் அல்லது அழித்தல் என்பவற்றிற்கு தேவையான அனைத்து செயல்களுக்கும் அல்லது அதற்கு அவசியமாகக் கூடியவாறான நடவடிக்கைகளைச் செய்வதும் அல்லது செய்விப்பதும் சட்டமுறையாதல் வேண்டும்.

10. குறிப்பிட்ட மலசலகூடத்தில் அல்லது மலசலகூடத்திற்கு அண்மையில் அறிவித்தல் அல்லது பெயர்ப்பலகை ஒன்றின் மூலம் மாவட்டச் செயலாளரினால் யாத்திரிகர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தை தவிர முகாம் பிரதேசத்துக்குள் ஆள் எவரும் மலசலம் கழித்தலாகாது.

11. முகாம் பிரதேசத்திற்குள் குறிப்பிட்ட குளத்தில், கிணற்றில், நீர்த்தேக்கத்தில் நீரோடையில் உள்ள நீரை எவரேனும் அசுத்தப்படுத்தல் ஆகாது.

12. குப்பை கூளங்களை போடுவதற்காக மாவட்டச் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள இடம் அல்லது தொட்டி தவிர ஆள் எவரும் முகாம் பிரதேசத்திற்குள் பொருட்கள் அல்லது குப்பை கூழங்கள் போடுதல் ஆகாது.

13. (1) முகாம் பிரதேசத்திற்குள் யாத்திரிகளுக்கான அனைத்து உணவு, பான வகைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்கு முறைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதியின் பந்தி (1) கீழ் தனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரயோகத்தின்போது, மாவட்டச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய எந்தவொரு பொலிஸ் அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் வழங்கப்படும் சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறுதல் ஆகாது.

14. (1) வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு வகையிலோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது வைக்கப்பட்டிருக்கும் உணவு அல்லது பானம், சுகாதாரம் அற்றது என அல்லது பாவனைக்கு உதவாதது என தென்படும் சந்தர்ப்பத்தில் மாவட்டச் செயலாளரினால் அல்லது வைத்திய அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் அத்தகைய உணவு பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தலாம்.

(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் உணவு அல்லது பானம் ஆள் எவரும் முகாம் பிரதேசத்திற்குள் விற்பனை செய்தலாகாது.

(3) இவ்வொழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் உணவு அல்லது பானம் எந்தவொரு பொலிஸ் அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் கைப்பற்றல், அழித்துவிடல் சட்டமுறையாதல் வேண்டும்.

15. பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை மாவட்டச் செயலாளரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்துடனன்றியும் அத்தகைய உரிமத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குதலன்றியும் முகாம் பிரதேசத்தினுள் 7 ஆம் பந்தி ஒழுங்குவிதியின்கீழ் அந்த நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட ஏதேனும் இடத்தில் ஆள் எவரும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை நிறுவுதலோ அல்லது நடத்துதலோ ஆகாது. ஒவ்வொரு உரிமமும் வைத்திய அதிகாரியின் அல்லது அத்தகைய மருத்துவ அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் விதிப்புரையின் கீழ் கட்டணம் எதுவுமின்றி விநியோகிக்கப்படல் வேண்டும்.

16. முகாம் பிரதேசத்திற்குள் உள்ள சகல பாண்சாலைகளும், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்கள், உணவு விடுதி மற்றும் தானச்சாலை மற்றும் அங்குள்ள அனைத்து தளபாடங்கள், உபகரணங்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

17. முகாம் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு காரணத்திற்காகவோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது

வைக்கப்பட்டிருக்கும் அனைத்து கேக் வகைகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் சமைத்த உணவு வகைகள் வைத்திய அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் திருப்திப்படும் வகையில் ஈக்கள் உட்புகாத வகையில் சரியான முறையில் கண்ணாடி காப்பகத்தினுள் வைத்தல் வேண்டும்.

18. தேநீர், கோப்பி, பால் அல்லது ஏதாவது உணவு வகை அல்லது பானம் என்பவற்றின் கழிவுகளையோ, சமையல் செய்யும் போது எஞ்சும் கழிவுகளையோ, வேறு கழிவுப் பொருட்களையோ, தரையில் அல்லது நிலத்தில் எறிதல் ஆகாது. அத்தகைய கழிவுப் பொருட்கள் எல்லாம் 19 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஏதேனும் கொள்கலன் ஒன்றில் இடப்படுதல் வேண்டும். அத்துடன் கழிவுப் பொருட்கள் மீதியாகவிருக்கும் பால் அல்லது அகற்றப்படும் பொருட்கள் எவையேனும் வாடிப் பிரதேசத்தினுள் அல்லது அண்மையிலிருக்கும் நிலத்தில் வீசியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடத்தின் சொந்தக்காரரினால் அல்லது பிரதான குடியிருப்பாளரினால் அவ்விடத்தில் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி அல்லது தானச்சாலை என்பவற்றில் ஒன்றாக இருக்குமிடத்து உரிமம் பெற்றவர் மூலம் அத்தகைய தவறு நீடிப்பதை தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்துடன் செயலாற்றினாரெனவும் எல்லா முற்காப்பும் எடுத்தாரெனவும் மற்றும் எண்பித்தலான்றி இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகளை மீறியுள்ளார்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

19. முகாம் பிரதேசத்திற்குள் ஏதேனும் வர்த்தக நோக்கத் திற்காகவோ வியாபார நோக்கத்திற்காகவோ பயன்படும் சகல பாண்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள் அமைந்துள்ள அனைத்து உணவு தயாரிக்குமிடங்கள், உணவுச் சாலைகள், உணவு தானசாலைகள் என்பவற்றிலும் ஒவ்வொரு கட்டிடத்திலும் அல்லது மனையிலும் 112 கன மீற்றருக்குக் (4 1/2 கன அடி) குறையாத கனமானமுள்ள மரத்தாலான அல்லது உலோகத்தாலான கழிவுத் தொட்டி ஒன்று வழங்கப்பட வேண்டியதோடு அந்தக் கழிவுத் தொட்டி அதில் கழிவுகளை போடும் அல்லது அதிலிருந்து கழிவுகளை அகற்றும்போது தவிர எந்நேரங்களிலும் மரத்தாலான அல்லது உலோகத்தாலான மூடியினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

20. (1) முகாம் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 15 ஆவது, 16 ஆவது, 17 ஆவது, 18 ஆவது அல்லது 19 ஆவது ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் நிறுவப்பட்டுள்ளதாக அல்லது நடத்திச் செல்லப்படுவதாக மாவட்டச் செயலாளர் கருதும் ஏனும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை அல்லது வியாபார ஸ்தலம் என்பதனை மூடிவிடுவதற்கும் அத்தகைய வளவு தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டிருந்தால் அந்த உரிமத்தை உடனடியாக ரத்து செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையராதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை அல்லது ஏதேனும் வியாபார நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் இவ் வொழுங்கு விதியின் 1 ஆம் பந்தியின் கீழ் மாவட்டச் செயலாளரினால் ஆக்கப்படும் எந்தவொரு சட்டமுறையான கட்டளைக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

21. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஆள் எவரேனும் முகாம் பிரதேசத்திற்குள் பிரவேசித்தல் ஆகாது.

22. (1) முகாம் பிரதேசத்திற்குள் ஆள் எவரும் கொள்ளை நோய் பரவும் பொழுது மாவட்டச் செயலாளர், யாத்திரிகர்களை முகாம் பிரதேசத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடுவதற்கும் வெளியேறி செல்வதற்காக வழி, வாகன வகை முறைகள் என்பவற்றை விதந்துரைத்தலும் சட்டமுறையாதல் வேண்டும்.

(2) மாவட்டச் செயலாளரினால் இப்பிரிவின் 1 ஆம் பந்தியின் கீழ்ஆக்கப்படும் சட்டமுறையான கட்டளை எதையும் எவரும் மீறுதல் ஆகாது.

23. முகாம் பிரதேசத்திற்குள் ஏதேனும் தொற்று நோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட ஆள் எவரும் தொற்றுநோய் அல்லது தொடுகை நோய் பீடித்துள்ளது பற்றி தெரிந்து கொண்டும் அவருடன் ஒன்றாக வசித்தால் ஆள் ஒவ்வொருவரும் அதனை வைத்திய அதிகாரிக்கு அல்லது பொது சுகாதார அலுவலருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

24. முகாம் பிரதேசத்தினுள் ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி என்பவற்றில் பொறுப்பாளியாக உள்ள ஒருவர் விடயத்திற்கு ஏற்ப அந்தப் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை எதுவாயினும் அதனுள் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவரெனக் கருதப்படும் எந்த ஒருவருக்கும் முகாம்பிரதேசத்திற்குள் பிரவேசிக்கவோ ஏதாவது பொருட்கள் அல்லது உணவு, பான வகைகள் விற்பதில், தயாரிப்பதில், விநியோகிப்பதில் பங்குபற்ற அனுமதித்தல் ஆகாது.

25. ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை என்பவற்றின் உரிமம் பெற்றவர் அல்லது ஏதாவதொரு தங்குமிடத்தில் அல்லது யாத்திரிகளின் ஒய்வு விடுதியின் உரிமையாளர் அல்லது தலைமை வதிவாளரினால் இந்த இடங்களில் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட எவரும் இருப்பதாகக் காணும் பட்சத்தில் தொற்றுநோயினாலோ, தொழுநோயினாலோ பீடிக்கப்பட்டவரையும் விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடத்தில், உணவுச்சாலையில் தானசாலை தங்குமிடம் யாத்திரிகர்களின் ஒய்வு விடுதி என்பவற்றில் எந்தளவு காலப்பகுதியாயினும் தங்கியிருப்பதற்கு அனுமதித்தல் ஆகாது. அத்தகைய ஏதேனும் வளவில் தொற்றுநோய் அல்லது தொழுநோய் கண்டுபிடிக்கப்படும்போது விடயத்திற்கேற்ப உரிமம் பெற்றவர் அல்லது உரிமையாளர் அல்லது பிரதான குடியிருப்பாளர் இந்த விடயத்தைப் பற்றி வைத்திய அதிகாரிக்கு அல்லது பொது சுகாதார பரிச்சகருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

26. ஏழாம் ஒழுங்குவிதியின் கீழ் யாசகம் செய்தல் மற்றும் தானம் கொடுத்தல் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு இடத்தில் பணமாகவோ வேறு வகையாகவோ ஆள் எவரும்முகாம் பிரதேசத்துள் தானம் வழங்குதலோ விநியோகித்தலோ ஆகாது.

27. மாவட்டச் செயலாளரினால் எழுத்துமூல அனுமதியின்றி ஆள் எவரும் முகாம் பிரதேசத்திற்குள் வான வெடிகளைக் கொழுத்துதல் அல்லது தீ ஆயுதம் பயன்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளலா காது.

28. 7 ஆவது ஒழுங்கு விதி அல்லது 10 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏதாவது ஒரு இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை எந்தவொருவராலும் தகாத வகையில் மாற்றவோ அல்லது நீக்கவோ இயலாது.

29. மாவட்டச் செயலாளர் வைத்திய அதிகாரி பொது சுகாதார பரிசோதகர் அல்லது எவரேனும் ஒரு பொலிஸ் அதிகாரியினால் பின்வருவனற்றைச் செய்தல் சட்டமுறை ஆகுதல் வேண்டும்.

(அ) இம் முற்போந்த ஒழுங்கு விதிகள் எதனையும் நடைமுறைப் படுத்துவதற்காக முகாம் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியினுள் அல்லது வளவுக்குள் உட்செல்லுதல் மற்றும்

(ஆ) 7 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் ஏதாவதொரு அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை காட்சிக்கு வைப்பதற்காக முகாம் பிரதேசத்திற்குள் ஏதேனும் ஒரு காணியின் மீது அல்லது வளவின் மீது ஏதாவதொரு தூணை அமைத்தல் அல்லது கட்டுதல் சட்டமுறையாகும்.

30.மாவட்டச் செயலாளர்,

(அ) 6 ஆவது அல்லது 27 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் தம்மால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அனுமதி;

(ஆ) 9 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமம்;

(இ) 15 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமம்

**துணைப்பட்டியல்**

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிழக்கு கிருவாபத்துவ அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் வலய இல. 146 புஹுல்யாய கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட அம்பலாந்தோட்டை கிரிஹண்டு ரஜமஹா விகாரையில் அமைந்துள்ள காணியின் அமைவிடம் கீழ்வருமாறு :-

அதற்கான பிரதேச வரையறை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு:

வடக்கு : அ.க.பி. 446 - தவாலுவில கிராமத்தின் பிரிவு இல. 143C, 141, 143C, 141 மற்றும் வளவு கங்கையும் ;
தெற்கு : அ.க.பி. 446 - தவாலுவில கிராமத்தின் பிரிவு இல. 141A மற்றும் 139A உம் ;
கிழக்கு : வளவு கங்கையும் ;
மேற்கு : அ.க.பி. 446 - தவாலுவில கிராமத்தின் பிரிவு இல. 139A, பிரதேச சபை வீதி, அ.க.பி. 446 தவாவிலுவ கிராமத்தில் பிரிவு இல. 143, 141, 143C, மற்றும் 141 ஆகும்.

10-250

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கியின் பிஎல்சீயின் பணிப்பாளர் சபையினால் 2014, ஓகத்து 26 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"ஹொறணையைச் சேர்ந்த கிரிகண்காணமகே கயான் தமிந்த பெரேரா என்பவர், (முன்னர் இ.அ.நி.கூ. வர்தன லிமிட்டெட் என அறியப்பட்ட) இ. அ. நி. கூ. வர்தன வங்கியின் பிஎல்சீயின் சார்பில் ஹொறணையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். யூ. கே. ஜயவர்த்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, நவெம்பர் 08 ஆந் திகதிய ஈட்டு முறி மீதும் 2010, திசெம்பர் 23 ஆந் திகதிய 286 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2012, பெப்புருவரி 17 ஆந் திகதிய 451 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 2013, சனவரி 23 ஆந் திகதிய 541 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராத லாலும்,

2014, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக தொண்ணூறு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நாநூற்று பதினைந்து ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 90,65,415.64) கொண்ட தொகையும், 2014, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 20,91,977.42) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீத (5.5%) வட்டியும், சொல்லப்பட்ட வீதம் மூன்று மாதங்களுக்கொரு தடவை ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், அத்துடன் இருபத்திரண்டு இலட்சத்து எண்பத்தையாயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டு ரூபா ஒரு சதம் (ரூ. 22,85,832.01) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு வீத (7%) வட்டியும், சொல்லப்பட்ட வீதம் மூன்று மாதங்களுக்கொரு தடவை ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், அத்துடன் நாற்பத்தாறு இலட்சத்து இருபத்துமூவாயிரத்து நூற்று முப்பது ரூபா ஐம்பது சதம் (ரூ. 46,23,130.50) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்து நான்கு வீத (24%) வட்டியும் மேற்சொல்லப்பட்ட 279, 286, 451, 541 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது சொல்லப்பட்ட கிரிகண்காணமகே கயான் தமிந்த பெரேரா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 279, 286, 451, 541 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும்

சொல்லப்பட்ட காணியையும் கட்டிடங்களையும் அதன்மீதுள்ள வேறெல்லா வற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து தொண்ணூறு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நாநூற்று பதினைந்து ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 90,65,415.64) கொண்ட தொகையையும், 2014, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபது இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 20,91,977.42) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீத (5.5%) வட்டியையும், சொல்லப்பட்ட வீதம் மூன்று மாதங்களுக்கொரு தடவை ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், அத்துடன் இருபத்திரண்டு இலட்சத்து எண்பத்தையாயிரத்து எண்ணூற்று முப்பத்திரண்டு ரூபா ஒரு சதம் (ரூ. 22,85,832.01) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு வீத (7%) வட்டியும், சொல்லப்பட்ட வீதம் மூன்று மாதங்களுக்கொரு தடவை ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும், அத்துடன் நாற்பத்தாறு இலட்சத்து இருபத்துமூவாயிரத்து நூற்று முப்பது ரூபா ஐம்பது சதம் (ரூ. 46,23,130.50) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்து நான்கு வீத (24%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 279, 286, 451, 541 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**279, 286, 451, 541 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், ரய்கம் கோறளையின் உடுகஹா பத்துவில், ரத்மல்கொட மேற்கு 621 இன் கிராம அலுவலர் பிரிவு ஹொறணை பிரதேச சபை மற்றும் இங்கிரிய பிரதேச செயலகத்தினுள் களுபஹன கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் அதீல்கும்புர எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யூ. திலக்கா நந்தனி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.07.29 ஆந் திகதிய 1251 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் A என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : திரு. எல். தயாரத்னவின் அதே காணியின் பாகம் ; கிழக்கு : போருவதந்தவிலிருந்து ஹந்தபான்கொடவுக்குச் செல்லும் பிரதான வீதி; தெற்கு : கே. தயாரத்ன பெரேராவின் அதேகாணியின் பாகம் ; மேற்கு : எல். தயாரத்னவின் அதே காணியின் பாகம். பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1251 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 21.5பே.) அல்லது 0.0544 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் ஹொறணை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்று அலுவலர்.

இ. அ. நி.கூ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-278

---

**இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, ஒகத்து 26 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கண்டியைச் சேர்ந்த கரவிட்ட ஆராச்சிகே நிஹால் என்பவர், கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சிசில் பீ ராஜரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, ஒற்றோபர் 14 ஆந் திகதிய 1482 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளன ராதலாலும்,

2014, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக அறுபத்தொன்பது இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்று பன்னிரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 69,28,312.90) கொண்ட தொகையும், 2014, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை அறுபத்து நான்கு இலட்சத்து எண்ணூற்று முப்பது ரூபா மூன்று சதம் (ரூ. 64,00,830.03) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக் கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீத (5.5%) வட்டியும், இவ்வட்டி வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்றுமாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சொல்லப்பட்ட கரவிட்ட ஆராச்சிகே நிஹால் என்பவரிடமிருந்துஇ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல்

(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1482 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறுபத்தொன்பது இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்று பன்னிரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 69,28,312.90) கொண்ட தொகையும், 2014, மாச்சு 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை அறுபத்து நான்கு இலட்சத்து எண்ணூற்று முப்பது ரூபா மூன்று சதம் (ரூ. 64,00,830.03) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீத (5.5%) வட்டியையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட கரவிட்ட ஆராச்சிகே நிஹால் என்பவரினால் இ.அ.நி.கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அதன்மீதுள்ள எல்லாமும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**1482 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கண்டி மாநகர நசபை எல்லைகளினுள் வட்டபுலுவ கிராமத்தில் அமைந்துள்ளதும், மல்கஹாமுதுனே வத்த மறுபெயர் வத்தேகெதரதென்ன ஹேன எனவழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.03.31 ஆந் திகதிய 8684 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : சொல்லப்பட்ட 8684 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 4 (வீதி) ; கிழக்கு : சொல்லப்பட்ட 8684 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 3 ; தெற்கு : ஏ. ஆர். எம். சியாத்து மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்பட்ட காணி (வரிமதிப்பீட்டிலக்கம் 5/80) மற்றும் ; மேற்கு : சொல்லப்பட்ட 8684 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1, பரப்பளவில் இது காணித்துண்டம் 4 இன் மீதும் அது நெடுகிலும் பொமலுவ வீதியிலிருந்தான வீதி வழியாகவும் தொலைபேசிக் கம்பிகள், நீர்க்குழாய்கள் மற்றும் மின்சாரக் கம்பிகள் இடுவதற்கான செல்வழியுரிமையுடனும் அதன் மீதுள்ள எல்லா வற்றுடனும் பதினொன்று தசம் ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 11.5பே.) கொண்டுள்ளதுடன் கண்டிக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்று அலுவலர்.

இ. அ. நி.கூ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-279

**இ. அ. நி. கூ. வங்கி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2014, யூலை 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''மட்டக்களப்பைச் சேர்ந்த (இதனகத்துப் பின்னர் 'கூட்டுக்கடன் பெறுநர்கள்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொன்னுத்துரை சுதாகரன் என அறியப்படும் பொன்னுத்துரை சுதாஹரன் மற்றும் வாசுகி சுதாகரன் திருமணத்துக்கு முன்னர் நடராசா எனவும் அறியப்படும் நடராசா வாசுகி என்போர், இ. அ. நி. கூ. வங்கியின் சார்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். காயத்திரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, மாச்சு 27 ஆந் திகதிய 433 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2014, மே 01 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்துமூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று அறுபது ரூபா எழுபத்து நான்கு சதம் (ரூ. 73,18,760.74) கொண்ட தொகையும், 2014, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை அறுபத்தேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று நான்கு ரூபா (ரூ. 67,99,994.00) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியும், சொல்லப்பட்ட பொன்னுத்துரை சுதாகரன் எனவும் அறியப்படும் பொன்னுத்துரை சுதாஹரன் மற்றும் வாசுகி சுதாகரன் திருமணத்துக்கு முன்னர் நடராசா எனவும் அறியப்படும் நடராசா வாசுகி என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் பின்னர் திருத்தப் பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 433 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் அதன்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்து வதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எழுபத்துமூன்று இலட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று அறுபது ரூபா எழுபத்து நான்கு சதம் (ரூ. 73,18,760.74) கொண்ட தொகையையும்,

2014, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை அறுபத்தேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று நான்கு ரூபா (ரூ. 67,99,994.00) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தி யாக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட பொன்னுத்துரை சுதாகரன் எனவும் அறியப்படும் பொன்னுத்துரை சுதாஹரன் மற்றும் வாசுகி சுதாகரன் திருமணத்துக்கு முன்னர் நடராசா எனவும் அறியப்படும் நடராசா வாசுகி என்போரினால் மேற்சொல்லப் பட்ட 433 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**433 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனைப் பத்துவில், உப்போடையில் அமைந்துள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு மற்றும் கிழக்கு : பிலிப்பையாவின் காணிகள் ; தெற்கு : தங்கராசா மகேஸ்வரியின் காணி மற்றும் ; மேற்கு: பாக்கியம் ஒழுங்கை ; பரப்பளவில் இது. வடக்கிலிருந்து கிழக்கு வரை 11 பாகங்களையும் 4 அடியையும் கிழக்கிலிருந்து மேற்கு வரை 12 1/2 பாகங்களையும் கொண்டுள்ளது. இதனுடனும் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உரிமைகளுடனும் சேர்த்து.

மிக்க அண்மையிலான நில அளவையின்படி மேற்படி காணி பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பெரிய உப்போடை கிராம அலுவலர் பிரிவில் மண்முனைப் பத்துவில் மட்டக்களப்பு மா. ச. எல்லைகளினுள் வட்டாரம் இல. 08 சீலா முனைக் கிராமத்தில், பாக்கியம் ஒழுங்கையில் அமைந்துள்ளதும், 50 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், உ.நி., ஏ. ஈ. கே. திசவீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013.01.14 ஆந் திகதிய 15/2013 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 எனக் குறித்துக் காட்டப்பட்டதுமான காணித்துண்டொன்று: அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : தற்போது என். ஜோதிநாயகத்தினால் உரிமை கோரப்பட்ட தோட்டம் ; கிழக்கு : திரு. மற்றும் திருமதி மனோகரனி னால் தற்போது உரிமைகோரப்பட்ட தோட்டம்; தெற்கு : ரீ. மகேஸ்வரியி னால் தற்போது உரிமைகோரப்பட்ட தோட்டம்; மற்றும் மேற்கு : பாக்கியம் ஒழுங்கை; பரப்பளவில் இது. 0.0413 ஹெக்டயர்களை அல் லது பதினாறு தசம் மூன்று மூன்று பேர்ச்சுகளைக் (0ஏ. 0றூ. 16.33பே.) கொண்டுள்ளது. இதனுடனும் அதன்கண் அடங்கியுள்ள கட்டிடம், கிணறு மற்றும் எல்லா உரிமைகளுடனும் சேர்த்து.

2. கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பெரிய உப்போடை கிராம அலுவலர் பிரிவில் மண்முனைப் பத்துவில், சீலாமுனைக் கிராமத்தில், கோட்டமுனையில், சக்கரியாஸ் வீதியில் அமைந்துள்ளதும், 39/18 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், உ.நி., ஏ. ஈ. கே. திசவீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012.12.03 ஆந் திகதிய 1628/2012 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டொன்று: அதன் எல்லை கள் பின்வருமாறு - வடகிழக்கு : கண்ணகி மற்றும் எஸ். சிவபாக்கியத் தின் தோட்டங்களும் பார் வீதியிலிருந்து சக்கரியாஸ் வீதிக்குச் செல்லும் ஒழுங்கையும் ; தென்கிழக்கு : பி. பவளகாந்தனின் தோட்டம் ; தென் மேற்கு : எஸ். கிருஷ்ணபிள்ளையின் தோட்டம்; மற்றும்; வடமேற்கு: வீ. பிரியாவின் தோட்டம், பரப்பளவில் இது 0.0734 ஹெக்டேயர்களை அல்லது இருபத்தொன்பது பேர்ச்சுகளைக் (0ஏ. 0றூ. 29.00பே.) கொண்டுள்ளது. இதனுடனும் அதன்கண் அடங்கியுள்ள கட்டிடம், கிணறு மற்றும் எல்லா உரிமைகளுடனும் சேர்த்து.

பின்வருவனவற்றிலும் அவற்றின் மீதும் அத்துடன்/அல்லது அவை நெடுகிலும் ஈடுவைப்பவர் அவரது வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக்குடியிருப்பாளர்கள், உரிமம்பெற்றவர்கள் மற்றும் அதிதிகள், இதன்பின்னர் எல்லா நேரங்களிலும் அவர்களின் விருப்பத்தின் பேரில் எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் பகலில் அல்லது இரவில் அதனோடு வழமையாக வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையாகத் துய்க்கப்பட்ட எல்லா மற்றும் தனித்தனியான உரிமைகள், வழிகள், அனுகூலங்கள் மற்றும் இணைந்துள்ளவையுடன் சேர்த்து இதன் கீழ் குறிப்பாக விவரிக்கப்பட்ட வீதி வழியில் அல்லது அதுநெடுகிலும் அல்லது அதன்மீது பாரமேற்றப்பட்ட அல்லது ஏற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் வேறு ஒவ்வொரு வகையினவையுமான வாகனங்களுடனோ அவையின்றியோ நடந்துசெல்வதன் மூலம் அல்லது எத்தகையதுமான வேறுவகையாகச் செல்வதற்கும், திரும்பிவருவதற்கும், கடந்து செல்வதற்கும், மீளக் கடந்து செல்வதற்கும், இடையறாத உட்செல்கை, வெளிச்செல்கை மற்றும் பின்னடைவு வழியும் செல்வழியும் என்பதற்கு ஈடுவைப்பவருக்கு முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும் அனுமதியும் மற்றும் மின்சார வடங்கள், மேந்தலைக் கம்பிகள், வடிகாலமைப்பு, வாயு, நீர்க்குழாய்கள், உபகரணங்கள் மற்றும் எத்தகைய வகையினவையுமான வேறு உபாயங்களை இடுவதற்கான முழுமையானதும் கட்டற்றதுமான உரிமையும் சுதந்திரமும்.

"கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 178A பெரிய உப்போடை கிராம அலுவலர் பிரிவில் சீலாமுனை அமிர்தகழியில் அமைந்துள்ளதும், 40 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டொன்று: அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: திருமதி எஸ். சிவபாக்கியத்தின் எஞ்சியுள்ள காணி ; தெற்கு : எஸ். கண்ணகியின் காணி ; கிழக்கு : வீதி; மற்றும் ; மேற்கு : ஒழுங்கை ; பரப்பளவில் இது, இரண்டு தசம் ஆறு ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 2.67பே.) கொண்டுள்ளது. இதனுடனும் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உரிமைகளுடனும் சேர்த்து."

ஏ. ஆர். பர்னாந்து,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-281

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, யூன் 27 ஆந் திகதியன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''(இதனகத்துப்பின்னர் 'கடன்பெறுநர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடவத்தையைச் சேர்ந்த கங்காணம் கமகே டொன் திலகசிறி என்பவர் இ. அ. நி. கூ. வர்தன வங்கியின் பிஎல்சீ யின் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருண என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஏப்பிறல் 10 ஆந் திகதிய 28246 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2014, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக எண்பத்திரண்டு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்று இருபத்தைந்து ரூபா பத்து சதம் (ரூ. 82,47,225.10) கொண்ட தொகையும், 2014, மே 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை எழுபத்தேழு இலட்சத்து முப்பத்தையாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு ரூபா முப்பத்துநான்கு சதம் (ரூ. 77,35,978.34) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்றுமாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியும், சொல்லப்பட்ட கங்காணம் கமகே டொன் திலகசிறி என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 28246 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் அதன்மீதுள்ள வேறெல்லாவற்றையும் (விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எண்பத்திரண்டு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்று இருபத்தைந்து ரூபா பத்து சதம் (ரூ. 82,47,225.10) கொண்ட தொகையும், 2014, மே 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை எழுபத்தேழு இலட்சத்து முப்பத்தையாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு ரூபா முப்பத்துநான்கு சதம் (ரூ. 77,35,978.34) கொண்ட தொகை மீது ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்றுமாதங்களுக்கொரு தடவை மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு சதவீத (6%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 28246 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் கங்காணம் கமகே டொன் திலகசிறி என்பவரினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 28246 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியன கோறளையின் அதிகாரி பத்துவில் களனி பிரதேச சபை எல்லைகளினுள் களனி பிரதேச சபை செயலாளர் இடப்பரப்பில் தலவத்துஹென்பிட்ட தெற்கின் கிராம சேவையாளர் பிரிவினுள் தலவத்துஹென்பிட்ட தெற்கில் அமைந்துள்ளதும், கெந்தஹேன மறுபெயர் கெந்தலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் கே. ஏ. ரூபசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.07.23 ஆந் திகதிய 477/2000 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கு : இப்போது டபிள்யூ. கே. அனோரிஸ் சிங்கோவின் காணி ; தென்கிழக்கு : இப்போது எம். எம். வீ. எவ். பெரேராவுக்குரிய 4658 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் B ; தென்மேற்கு : உ. நி., சுகத் சமரவிக்ரம என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.02.23 ஆந் திகதிய 66/1995 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 B/2 மற்றும் 1B/1 அத்துடன் ; வடமேற்கு : முன்னர் எஸ். ரிச்சேர்ட் பெரேராவுக்குரிய காணி, பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் இருபத்துநான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 24.25பே.) கொண்டுள்ளது.

கீழே விபரிக்கப்பட்ட வீதி ஒக்கிடங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் சேர்த்து :-

1. மேற்கூறப்பட்ட தலவத்துஹென்பிட்ட தெற்கில் அமைந்துள்ளதும், கெந்தஹேன மறுபெயர் கெந்தலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். ஜே. பேர்ம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1971.01.12 ஆந் திகதிய 4658 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் C (4 அடி அகல வீதி) என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் C பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கு : காணித்துண்டம் B ; தென்கிழக்கு : பிரதான வீதி நெடுகிலுமான வீதி ; தென்மேற்கு : டபிள்யூ. கே. அக்னஸ் பெரேராவின் காணி மற்றும் அத்துடன் ; வடமேற்கு : காணித்துண்டம் A, பரப்பளவில் இது, மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகளை (0ஏ. 0றூ. 3.5பே.) கொண்டுள்ளதுடன், கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. மேற்கூறப்பட்ட தலவத்துஹென்பிட்ட தெற்கில் அமைந்துள்ளதும், கெந்தஹேன மறுபெயர் கெந்தலந்த எனவழைக் கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சுகத் சமரவிக்ரம என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.07.14 ஆந் திகதிய 176/1992 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு

வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கு: காணித்துண்டம் 1 மற்றும் காணித்துண்டம் 2 (4 அடி அகல வீதி ஒதுக்கிடம்) ; தென்கிழக்கு : காணித்துண்டம் 4 (8 அடி அகல வீதி ஒதுக்கிடம்) ; தென்மேற்கு : இப்போது டபிள்யூ. கே. அக்னஸ் பெரேராவுக்குரிய 11695 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் ; வடமேற்கு : இப்போது டபிள்யூ. கே. அக்னஸ் பெரேராவுக்குரிய 11695 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B இன் எஞ்சியுள்ள பாகம்; பரப்பளவில் இது, இரண்டு தசம் நான்கு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 2.45பே.) கொண்டுள்ளதுடன், கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

3. மேற்கூறப்பட்ட தலவத்துஹென்பிட்ட தெற்கில் அமைந்துள்ளதும், கெந்தஹேன மறுபெயர் கெந்தலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 176/1992 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 4 (8 அடி அகல வீதி) என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 4 பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கு : காணித்துண்டம் 2 (4 அகல வீதி ஒதுக்கிடம்) ; தென்கிழக்கு : 11695 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A மற்றும் காணித்துண்டம் 1B இன் எஞ்சியுள்ள பாகம் ; தென்மேற்கு : காணித்துண்டம் 6 மற்றும் ; வடமேற்கு : இப்போது டபிள்யூ. கே. அக்னஸ் பெரேராவுக்குரிய 11695 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் காணித்துண்டம் 3 (4 அடி அணுகுகை) ; பரப்பளவில் இது, ஒன்று தசம் இரண்டு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 1.25பே.) கொண்டுள்ளதுடன், கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

4. மேற்கூறப்பட்ட தலவத்துஹென்பிட்ட தெற்கில் அமைந்துள்ளதும், கெந்தஹேன மறுபெயர் கெந்தலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 176/1992 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 5 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 5 பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கு : இப்போது டபிள்யூ. கே. அக்னஸ் பெரேராவுக்குரிய 11695 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் காணித்துண்டம் 4 (4 அடி அணுகுகை) ; தென்கிழக்கு : வீதி ஒக்கிடம் (கிரிபத்கொடை - உடுபில) ; தென்மேற்கு : இப்போது டபிள்யூ. ஜே. பெரேராவுக்குரிய காணி மற்றும் ; வடமேற்கு : 3995 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 இன் எஞ்சியுள்ள பாகம் ; பரப்பளவில் இது, இரண்டு தசம் ஆறு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 2.65பே.) கொண்டுள்ளதுடன், கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்ட 477/ 2000 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் 1 B/2, K மற்றும் 2 என அடையாளமிடப்பட்ட வீதி ஒதுக்கிடத்தைப் பயன்படுத்தவதற்கான உரிமையுடன் சேர்த்து.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம நிறைவேற்று அலுவலர்.

இ. அ. நி.கூ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-280

## யூனியன் வங்கி பீஎல்சீ

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2014 யூலை மாதம் 4 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ஸ்ரீ லங்கா எயார்போட் ரோட், இலக்கம் 321/2/A குரன , கட்டுநாயக்காவில் வசிக்கும் போல் அரவிந்த கொலம்பகே (தேசிய அடையாள அட்டை இலக்கம் 671660676V) (இதன் பின் கடன் வாங்கியவர் என்று கருதப்படுவோர்) அவ்வப்போது கடன்கள் மற்றும் ஓவர்டிராப்ட் என்பன மூலம் கடன் வசதிகளைப் பெற்று ஆகவே கடன் எடுத்தவர் ரூபாய் 3 கோடிக்கு 01-03-2010 இல் இலக்கம் 1248 கொண்ட முதலாவது அடகு முறியையும் ரூபாய் 6,00,000.00 க்கு 13-12-2010 இலக்கம் 1379 கொண்ட இரண்டாவது அடகு முறியையும் ரூபாய் 1.5 கோடிக்கு 18-11-2011 இலக்கம் 1621 கொண்ட மூன்றாவது அடகு முறியையும் 2013-02-28 இல் இலக்கம் 1821 கொண்ட திருத்திய உறுதி என்று அழைக்கப்படும் ஒரு உறுதியை நிறைவேற்றினார். மேற்கூறப்பட்ட எல்லா உறுதிகளும் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி.ஏ.எல்.பி. தம்மிக சில்வாவினால் அத்தாட்சி இட்டு உறுதி செய்யப்பட்டது. கீழே விபரமாக குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் உள்ள ஆதனத்தை ரூபாய் 5.5 மில்லியன் (ரூ. 5,500,000) யூனியன் வங்கி கொழும்பு பிஎல்சிக்கு (இதன் பின் யூனியன் வங்கி என அழைக்கப்படும்) அடகு வைத்திருந்தார். மேற் கூறப்பட்ட வங்கி இருப்புக்கு மேலதிக பணம் மற்றும் காலவரையறை கடன் வசதிகள் பெற்ற காரணத்தினால் முப்பத்தைந்து இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து ஐந்நூற்றி ஐம்பத்தி ஒன்பது ரூபா நாற்பத்தியெட்டு சதம் (ரூ. 35,25,559.48) யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடன்பெற்றவரால் 09.07.2014 மேற்கூறப்பட்ட பணம் மற்றும் 10.07.2014 ஆந் திகதி மேற்கூறப்பட்ட பணத்திற்கான வட்டியுடன் வங்கிக்கு செலுத்த வேண்டி உள்ளது.

ஆகவே யூனியன் வங்கிப் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) பிரிவு 03 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி கடன் எடுத்தவர்கள் மேலேகூறப்பட்ட கடன் நிலுவைப்பணத்தை திருப்பி செலுத்த தவறி உள்ளார்கள். கூறப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் உள்ள நியதிகளுக்கு இணங்க வங்கி மேற்கூறப்பட்ட 1990 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 ஆம் பிரிவின் கீழ் யூனியன் வங்கி அடகு முறிகள் இலக்கங்கள் 1248, 1379 மற்றும் 1621 அத்துடன் சேர்த்து வாசிக்கும் திருத்த உறுதி இலக்கம் 1821 என்பன மூலம் வங்கிக்கு அடகு வைத்த மேற்கூறப்பட்ட காணிக்கு செலுத்த வேண்டிய முப்பத்தைந்து இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து ஐந்நூற்றி ஐம்பத்தி ஒன்பது

ரூபா நாற்பத்தியெட்டு சதம் (ரூ. 35,25,559.48) யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடன்பெற்றவர்களால் 09.07.2014 ஆந் திகதிக்கு மேற்கூறப்பட்ட பணம் மற்றும் 10.07.2014 ஆம் திகதி மேற்கூறப்பட்ட பணத்திற்கான வட்டியுடன் அறவிட வங்கி உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் திரிவங்க மற்றும் சேனாநாயக்க என்பவர்கள் மூலம் பொது ஏல விற்பனையில் விற்று மேற்கூறப்பட்ட கடன் பணத்தை திரும்பப் பெற தீர்மானம் கொண்டுள்ளது. யூனியன் வங்கிக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 13 இன் மேற் கூறப்பட்ட அடகு முறிகள் இலக்கங்கள் 1248, 1379, 1621 மற்றும் சேர்த்து வாசிக்கும் திருத்தல் உறுதி 1821 என்பனவற்றின் நியதிகள் படி காலவரை கொண்ட கடன் வசதிகள் கொண்ட மற்றும் வங்கி இருப்புக்கு மேல் பணம் எடுக்கும் வசதிகள் என்பனவற்றிற்கு 09/07/2004 இல் நிலுவையில் உள்ள மொத்த தொகையான முப்பத்தைந்து இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஒன்பது ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 35,25,559.48) என்பனவற்றை திருப்பிப் பெற அதிகாரம் உண்டு.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பதிவாளர் பிரிவு, நீர்கொழும்பு கட்டுநாயக்க- சீதுவ நகரசபை எல்லைக்குள் டாசிய பத்து அளுத்குரு கோரளேயில் உத்தரவாதம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. சி. எஸ். குணரத்தினத்தினால் 1964 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட இலக்கம் 4775 கொண்ட லொட் ஏ யில் விபரிக்கப்பட்ட ''அம்பகாவத்தை'' என்றழைக்கப்படும் காணித்துண்டு வடக்கு: ஸ்ரீ லங்கா எயார் போஸ் வீதி; கிழக்கு: லொட் A1 7 அடி அகல பாதை ஒதுக்கீடு; தெற்கு: லொட் பி; மேற்கு: நில உரிமையாளர் சமல் சில்வாவுடைய காணி. இதன் விஸ்தீரணம் இருபத்தியேழு பேர்ச்சர்ஸ் (00ஏ. 00றூ. 27பே.) உத்தரவாதம் பெற்ற நிலஅளவையாளர் பி.டி.என்.பீரிஸ் அவர்களால் 1998 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி வரைபட இலக்கம் 1217 இல் லொட் 1 என்று குறியீடு செய்யப்பட்ட மற்றும் திரும்பவும் அளக்கப்பட்ட காணித்துண்டு உத்தரவாதம் பெற்ற நிலஅளவையாளர் பி.டி.என். பீரிஸ் இனால் 1998 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட பட இலக்கம் 1217 இல் லொட் 1 என்று குறிப்பீடு செய்யப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்: வடக்கு: ஸ்ரீ லங்கா எயார் போஸ் ரோட்; கிழக்கு: ரோட் (தனிப்பட்ட); தெற்கு: மானெல் கிரேரோவின் காணி; மேற்கு: இந்திராணி குணரத்தினவின் காணி சொல்லப்பட்ட எல்லையில் அதன் விஸ்தீரணம் இருபத்தி ஐந்து தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சர்ஸ் ( 00ஏ. 00றூ. 25.20 பே.) அல்லது 0.0637) ஹெக்டயர்ஸ்.

உத்தரவாதம் பெற்ற நில அளவையாளர் பி.டி.என்.பீரிஸ் இனால் 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட பட இலக்கம் 4113 இல் லொட் 1 என்று குறிப்பீடு செய்யப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்: வடக்கு: ஸ்ரீ லங்கா எயார் போஸ் ரோட்; கிழக்கு: ரோட் (தனிப்பட்ட); தெற்கு: மானெல் கிரேரோவின் காணி; மேற்கு: இந்திராணி குணரத்தினவின் காணி சொல்லப்பட்ட எல்லையில் அதன் விஸ்தீரணம் இருபத்தி ஐந்து தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சர்ஸ் ( 00ஏ.00றூ.25.20பே.) அல்லது 0.0637) ஹெக்டயர்ஸ். (C 812/182 காணிப் பதிவகம் நீர்கொழும்பு)

பணிப்பாளர் சபையின்கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
சபைச் செயலாளர்.

10- 239

### யூனியன் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2014, ஒகத்து மாதம் 01 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மொரட்டுவை கொரகான, காலி வீதி, இல. 306 என்ற முகவரியில் வசிக்கின்ற (இதனகத்துப்பின்னர் ''கடன் பெற்றவர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) (தே.அ.அ. இல. 731673497A கொண்ட) நம்முனி கமல் நிஷாந்த த சொய்ஸா என்பவர் முறையே ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா (ரூ 1,20,00,000.00) இற்கான தவணைக் கடனையும், முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) இற்கான வங்கி மேலதிகப்பற்று மற்றும் நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) இற்கான உத்தரவாதப் பத்திரங்கள் என்ற அடிப்படையில் வங்கி வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும், சொல்லப்பட்ட கடன் பெற்றவர்கள் ஒரு கோடி தொண்ணூறு இலட்சம் ரூபா (ரூபா.1,90,00,000) தொகைக்காக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். சீ. பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.06.20 ஆந் திகதியுடைய 121 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறியை நிறைவேற்றி, அத் தவணைக் கடன் வசதியின் காரணமாக (இதனகத்துப்பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படும்) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சி இனால் அறவிட வேண்டிய ஒரு கோடி தொண்ணூறு இலட்சம் ரூபா (ரூ.1,90,00,000) கொண்ட தொகையையும், அதன் மீதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்கு பிணைப்பொறுப்பாக இதன் கடன் பெற்றவர் கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை ஈடுவைத்து, அடைமானம் செய்துள்ளதாலும், மேற்குறித்த தவணைக்கடன் வசதியின் காரணமாக 2014.06.25 ஆந் திகதியில் உள்ளவாறான நேரடிப் பொறுப்பான மொத்த நிலுவைத் தொகையாகிய இரண்டு கோடியே பதினான்கு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து ரூபா எழுபத்தொரு சதம் (ரூபா 2,14,99,845.71) ஆகிய தொகையும், 2014.06.26 ஆம் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான வட்டியும் சொல்லப்பட்ட கடன் பெற்றவர்களிடமிருந்த யூனியன் வங்கிக்கு வருமதியாகவும் சேர வேண்டியதாகவும் இருக்கின்றது.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்காப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடன் பெற்றவரால் மேற்குறித்த கடன் தொகையின் நிலுவையைக் கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதாலும், சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் காரணமாக 2014.06.25 ஆந் திகதியில் உள்ளவாறான நேரடிப் பொறுப்பான மொத்த நிலுவைத் தொகையாகிய இரண்டு கோடியே பதினான்கு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 2,14,99,845.71) ஆகிய தொகையை

யும் , 2014.06.26 ஆம் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான வட்டியையும், சொல்லப்பட்ட 2013.06.20 ஆம் திகதியுடைய 121 ஆம் இலக்க ஈட்டு முறியினாலும் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் பெற்றுக் கொள்வதற்காக இங்கு அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள 2013.06.20 ஆம் திகதியிடப்பட்ட 121 ஆம் இலக்க மேற் சொல்லப்பட்ட ஈட்டு முறியின் கீழ் மற்றும் அதன் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய திரிவங்க அன்ட் சேனநாயக்க ஒக்ஸனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டி தெபெத்தவில் பாணந்துறை பிரதேச சபை கெசெல்வத்த உப அலுவலகப் பிரதேசத்திற்குள் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 674 கொரகபல கிராம சேவகர் பிரிவில் கொரகபல என்ற இடத்தில் எஸ். ஜீ. குறுப்பு மாவத்தையில் வரி மதிப்பீட்டு இலக்கம் 275/53 என்ற இடத்தில் அமைந்துள்ள ரதுவத்த, குருந்துவத்த, உலுகேவத்த பவுலா ஓவிட மற்றும் மொரகஹவத்த எனவும் கோன்கஹவத்த எனவும் அழைக்கப்படுகின்ற பிரிவிடப்பட்ட ஐந்தில் ஒரு பங்கின் ஒரு பாகமான காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. எல். டி. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 2002, செத்தெம்பர் 28 ஆந் திகதியுடைய 6401 ஆம் இலக்க வரைபடத்தின் அனைத்தும் பிரித்தொதுக்கப்பட்டு அதில் அமைந்துள்ள மரங்கள், விவசாயங்கள், அனைத்தையும் உள்ளடக்கிய காணிக்கு வடக்கு: காலி வீதியிலிருந்து வீடுகளுக்குச் செல்கின்ற பாதை; கிழக்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். டபிள்யூ. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப் பட்ட 1798 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணியின் துண்டம் டீ2டீ ; தெற்கு: 3251 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணியின் துண்டம் 2; மேற்கு: 3251 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணியின் துண்டம் 2 மற்றும் 5044 ஆம் இலக்க வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட காணி ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு சொல்லப்பட்ட 6401 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பத்தேழு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 37.90பே) அல்லது 0.09589 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடையது.

சொல்லப்பட்ட காணித்துண்டம் சொல்லப்பட்ட 6401 ஆம் இலக்க வரைபடத்தில் மீள் அளவீட்டின்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேலே சொல்லப்பட்ட கொரகபல என்ற இடத்தில் அமைந்துள்ள ரதுவத்த, குருந்துவத்த, உலுகேவத்த பவுலா ஓவிட மற்றும் மொரகஹவத்த எனவும் கோன்கஹவத்த எனவும் அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் மு. ஆ. வீரபன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1977 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதியுடைய 838 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்தொதுக்கப்பட்டு காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட காணிக்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: பாதை; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். டபிள்யூ. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 1798 ஆம் இலக்க வரைபடத்தின் அதே காணியின் துண்டம் டீ2டீ ; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எல். டி. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 3251 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 2; மேற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எல். டி. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 5064 ஆம் இலக்க வரைபடத்தில் காணித் துண்டம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டது என்பதுடன் சொல்லப்பட்ட 838 ஆம் இலக்க வரைபடத்திற்கேற்ப முப்பத்தேழு தசம் ஒன்பது பூச்சியம் (00ஏ. 00றூ. 37.90பே.) விஸ்தீரணத்தைக் கொண்டு பாணந்துறைக் காணிப்பதிவகத்தில் F358/233 காணிப்பிரிவின்கீழ் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு F573/258 பிரிவுக்கு முன் கொண்டு வரப்பட்டது.

சொல்லப்பட்ட காணியின் வடக்கு எல்லை மீது அமைந்துள்ள மேல் வீதியின் பாதை உரிமையுடன் கூடியது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
பணிப்பாளர் சபையின் செயலாளர்.

10-276

---

**இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கியின் பிஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2014, யூலை 24 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 5110 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும், [முன்னைய இல. N.(PVS) 32841] (இதனத்துப் பின்னர் "கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), ராஜகிரிய, நாவல வீதி, 575 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான ஒரு மிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவேட்) லிமிட்டெட், எல்லாம் (முன்னர் இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட் என அறியப்பட்ட) இ. அ. நி. கூ. வர்தன வங்கி பிஎல்சீ யின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஜயசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 05 ஆந் திகதிய 411 ஆம் இலக்க ஈட்டு முறி மீதும், 2011, செத்தெம்பர் 26 ஆந் திகதிய கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பீ. டபிள்யூ. மீகஹாவெல என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 72 ஆம், 73 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

2014, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஏழு கோடி ஒன்பது இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 7,09,47,799.58) கொண்ட தொகையும், 2014, மே 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மூன்று கோடி ஒரு

இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்து இருபத்தொன்பது ரூபா மூன்று சதம் (ரூ. 3, 01,76,929.03) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு சதவீத (24%) வட்டியும், இரண்டு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரம் ரூபா (ரூ. 2,97,53,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது வீத (20%) வட்டியும், எழுபத்து நான்கு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று அறுபது ரூபா (ரூ. 74,24,160) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு வீத (26%) வட்டியும் மேற்சொல்லப்பட்ட 411, 72, 73 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது சொல்லப்பட்ட ஒரு மிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 411, 72, 73 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீயினால் உறப்பட்ட, கம்பனிக்காகவும் அதன்சார்பிலும் பணிப்பாளர்களாகவுள்ள இருவரும் கொழும்பைச் சேர்ந்த ஜயலத் சேனாரத்னகே லசந்த சேனாரத்ன மற்றும் புளத்சிங்களகே இஷா வருணி சேனாரத்ன என்போரினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் மேற்கூறப்பட்ட 411, 73 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஒரு மிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட காணியினதும் வளவுகளினதும் அதன்மீதுள்ள வேறெல்லாவற்றினதும் இறையிலி உரிமைகளையும் மேற்கூறப்பட்ட 72 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட காணியினதும் வளவுகளினதும் குத்தகைப்பற்று உரிமைகளையும் அதன்மீதுள்ள பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி,சாதனம் மற்றும் வேறெல்லாவற்றையும் விளம்பரப் படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஏழு கோடியே ஒன்பது இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 7,09,47,799.58) கொண்ட தொகையையும், 2014, மே 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மூன்று கோடியே ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்து இருபத்தொன்பது ரூபா மூன்று சதம் (ரூ. 3,01,76,929.03) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு சதவீத (24%) வட்டியும், இரண்டு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரம் ரூபா (ரூ. 2,97,53,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது வீத (20%) வட்டியும், எழுபத்து நான்கு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று அறுபது ரூபா (ரூ. 74,24,160) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தாறு வீத (26%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளினால் இ. அ. நி. கூ. வர்தன வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.”

**411 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

பின்வருவனவுட்பட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி மற்றும் சாதனம் முழுவதும்.

விவரணம்

1. பிட்டுமென் அஸ்போல்ட் பொறித்தொகுதி
வகை : ஷிங் சாயிங் பிரீமிக்ஸ் பொறித்தொகுதி
கொள்ளளவு : 60 - 80 T/ H, சலவைக் கொள்ளளவு 1000 கி.கி.
மாதிரி: TSAP 1000 ஆய்வுகூடச் சாதனத்துடன்

2. இமல்ஷன் பொறித்தொகுதி
கேத்தல் 6000 லிட் X2,
சூடான எண்ணெய் கொதிகலன்,
லகிங் பொருளுடன் களஞ்சியத் தாங்கி
குளிரூட்டும் தாங்கி

3. எந்திரத் தொகுதி (சுமிட்டோமோ பேவர் ட்ரக் வகை, சகாய்
இறப்பர் உருளி)

4. பவுசர் டான்கேர்ஸ்
மண்ணெண்ணெய் டிராக்டர் பிறவுசர்
மண்ணெண்ணெய் டேய்லர் பிறவுசர்
அஸ்போல்ட் டான்க்கர்

புத்தளம் மாவட்டத்தில், மாதம்பே, சுதுவெல்ல, ஒறுமிக்ஸ் அஸ்போல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் வளவுகளிலும் அவற்றின் மீதும் இப்போது கிடக்கின்ற அத்துடன் கம்பனி இப்போது தொழில் நடாத்துகின்ற அத்துடன் இதன்பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் தொழில் கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்கள் காலத்துக்குக் காலம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய, வைத்திருக்கப் படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய வேறெவையேனும் கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அத்துடன் சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் களஞ்சியப்படுத்தப்படக்கூடிய வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் மற்றும் வளவுகளிலும் அவற்றின் மீதும் உள்ள உதிரிப்பாகங்களுடனும் துணைப் பொருட்களுடனும் கருவிகளுடனும், அத்துடன் இதன்பின்னர் காலத்துக்குக் காலமும் எல்லா நேரங்களிலும் மேற்கூறப்பட்ட கிட்டங்கிகளினுள், களஞ்சியங்களினுள் மற்றும் வளவுகளினுள் கொண்டுவரப்பட வேண்டிய அல்லது கொண்டுவரப்படக்கூடிய, வைத்திருக்கப்படவேண்டிய அல்லது வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கிடக்கவேண்டிய அல்லது கிடக்கக்கூடிய கிட்டங்கிகளிலும் களஞ்சியங்களிலும் வளவுகளிலும் அவற்றின் மீதும் கம்பனி இதன் பின்னர் எந்நேரத்திலும் காலத்துக்குக் காலமும் அதன் தொழிலை அல்லது வியாபாரத்தை அப்புறப்படுத்த வேண்டிய அல்லது அப்புறப்படுத்தக்கூடிய அல்லது அதன் தொழிலை அல்லது வியாபாரத்தைக் கொண்டு நடாத்தவேண்டிய அல்லது கொண்டு நடாத்தக்கூடிய அல்லது சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதியை மற்றும் சாதனங்களை, உதிரிப்பாகங்களை, துணைப்பொருட்களை அத்துடன் கருவிகளை வைத்திருக்கவேண்டிய அல்லது வைத்திருக்கக்கூடிய எல்லா அல்லது வேறேதேனும் தொழிலிடத்திலும் அல்லது வேறேவையேனும் தொழிலிடங்களிலும் சொல்லப்பட்ட அசைவுள்ள பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை மற்றும் சாதனங்களை காலத்துக்குக் காலம் மாற்றீடு செய்ய வேண்டிய அல்லது மாற்றீடு செய்யக்கூடிய எத்தகையதுமான அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, மற்றும் சாதனங்கள் என்பவற்றின் முழுமையுடனும் சேர்த்து.

**72 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹாபிட்டிகம் கோறளையின் உடுகஹா பத்துவில் கிட்டலவலன கிராமத்தில் புலனேகந்த எனவழைக்கப்பட்ட முடிக்குரிய அக்காணிகள் அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : குக்கன்ஹென எல ; கிழக்கு : எம். சீ. பெரேராவினால் புலன்கந்த அத்துமீறுகை, P. P. 18290, T. P. S. 360980 மற்றும் 355677 இல் காணித்துண்டம் 2 மற்றும் காணித்துண்டம் 1 ; தெற்கு : காணித்துண்டம் 7 மற்றும் ; மேற்கு : காணித்துண்டங்கள் 5, 3 மற்றும் 1 அத்துடன் T.P. 78212; பரப்பளவில் இது. எட்டு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொன்பது பேர்ச்சுகளை (8ஏ. 1றூ. 39பே.) கொண்டுள்ளது. தொகுதி/பக்கம் F182/85 இல் நீர்கொழும்புக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹாபிட்டிகம் கோறளையின் உடுகஹா பத்துவில் கிட்டலவலன கிராமத்தில் புலனேகந்த அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : T. P. 96839 இன் மீது உரிமை கோரப்பட்ட காணி ; கிழக்கு: T. P. 96839 இன்மீது உரிமை கோரப்பட்ட காணி, புலனேகந்த தொல, T. P. 355675 மற்றும் காணித்துண்டம் 16 ; தெற்கு : T. P. 355677 மற்றும் 360980 அத்துடன்; மேற்கு : T. P. 360980, மால தொல காணித்துண்டம் 2 மற்றும் T. P. 96839 இன் மீது உரிமை கோரப்பட்ட காணி; பரப்பளவில் இது. புலனேகந்த தொல மற்றும் மால தொல புறநீங்கலாக. பன்னிரண்டு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தொன்பது பேர்ச்சு (12ஏ. 2றூ. 39பே.) கொண்டுள்ளது. பதில் நிலஅளவையாளர் தலைமையதிபதி திரு. எல். ஜீ. ஓ. வுட்ஹௌஸ் என்பவரினால் மெய்யென்றுதிப்படுத்தப்பட்ட 1937, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட 5908, 5909 ஆம் இலக்க குத்தகை வரைபடங்களில் மேலும் குறிப்பாக வரையறுக்கப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

**73 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள் ஹாபிட்டிகம் கோறளையின் உடுகஹா பத்துவில் மீரிகம பிரதேச எல்லைகளினுள் கித்தவலனவில் அமைந்தள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் புலனேகந்த மறுபெயர் முக்கலன்ஹேன மற்றும் தலகஹாலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991, மே 17 ஆந் திகதிய 5045 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் F ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் C ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட சொல்லப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் R 4; மற்றும் மேற்கு: சொல்லப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A ; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 5045 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஐந்து ஏக்கர் பன்னிரண்டு பேர்ச்சுகளை (5ஏ. 0றூ. 12பே.) அல்லது 2.0538 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் நீர்கொழும்புக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மிக அண்மைய நிலஅளவை வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணித்துண்டின் மீள்நிலஅளவையாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள் ஹாபிட்டிகம், கோறளையின் உடுகஹா பத்துவில் மீரிகம பிரதேச எல்லைகளினுள் கித்தவலனவில் அமைந்தள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் புலனேகந்த, முக்கலன்ஹேன மற்றும் தலகஹாலந்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வருண அஜந்த யாப்பா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 22 ஆந் திகதிய 1053 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் F ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் C மற்றும் வீதி ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ஏ. சீ. சேனாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட சொல்லப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் R 4; மற்றும் மேற்கு : சொல்லப்பட்ட 285 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A ; பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 1053 ஆம் இலக்க வரைபடத்தின் படி ஐந்து ஏக்கர் பன்னிரண்டு பேர்ச்சு (5ஏ. 0றூ. 12பே.) அல்லது 2.0538 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதம பிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்தன வங்கி பீஎல்சீ,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு.

10-282

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2014**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2014 |
| | | வெள்ளி | 10.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2014 |
| | | வெள்ளி | 17.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2014 |
| | | வெள்ளி | 24.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2014 |
| | | வெள்ளி | 31.10.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2014 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2014 |
| | | வெள்ளி | 14.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2014 |
| | | வெள்ளி | 21.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2014 |
| | | வெள்ளி | 28.11.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2014 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 05.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2014 |
| | | வெள்ளி | 12.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2014 |
| | | வெள்ளி | 19.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2014 |
| | | வெள்ளி | 26.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.